Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 379/2025** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **முனியாண்டி (சிறப்பு சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர்** . 09.45
**10.06.2026.**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அருப்புக்கோட்டை நெடுஞ்சாலை ரோந்து பணியில் உள்ளேன். கடந்த 10.04.2025 ம் தேதி 07.15 மணியளவில் சாத்தூர் மதுவிலக்கு அமலாக்கபிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது நான் மற்றும் தலைமை காவலர் ராமமூர்த்தி மற்றும் முதல் நிலை காவலர் லோகநாதன் ஆகியோர் பார்ட்டி சகிதம் காவல்நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மது, சூதாட்டம் சம்மந்தமாக ரோந்து செய்து வந்தபோது அருப்புக்கோட்டை – பந்தல்குடி ரோடு ஆட்டுச்சந்தை அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சார்பு ஆய்வாளர் நிறுத்தி விசாரித்தபோது அவர் பெயர் முத்துமாரியப்பன் என்று சொன்னவரை அவர் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்தபோது அதில் 180 ML Old Chef Brandy – 30 பாட்டில்கள் வைத்திருந்தார்.

2. மேற்படி பாட்டில்களை சாக்குப்பையில் மறைத்து எவ்வித அனுமதியோ, உரிமமோ இல்லாமல் அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக கூறியதன் பேரில் எதிரி முத்துமாரியப்பன் என்பவரை இரவு 07.15 மணிக்கு அந்த இடத்தில் வைத்து கைது செய்தும்,

மதுபாட்டில்களை கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் வந்த தலைமை காவலர் ராமமூர்த்தி முதல் நிலை காவலர் லோகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து மது பாட்டில்களை கைப்பற்றி அத்தாட்சியில் சாட்சிகளிடமும் எதிரியிடமும் கையெழுத்து பெற்றேன்.

3. பின்னர் வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி முத்துமாரியப்பனுக்கு எதிராக நிலைய குற்ற எண். 16/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அத்தாட்சியை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரியிடமிருந்து மதுபானங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் வீடியோ பதிவு எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து எந்த மதுபானங்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அதனால் தான் தனிநபர் சாட்சிகள் யாரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 379/2025** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **லோகநாதன் (முதல் நிலை காவலர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர் .**

**10.06.2026.**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருச்சுழி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 10.04.2025 ம் தேதி 07.15 மணியளவில் நான் சாத்துார் மதுவிலக்கு அமலாக்கபிரிவில் பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முனியாண்டி அவர்களுடன், நான் மற்றும் தலைமை காவலர் ராமமூர்த்தி ஆகியோர் பார்ட்டி சகிதம் காவல்நிலைய சரகததிற்கு உட்பட்ட பகுதிகளில் மது, சூதாட்டம் சம்மந்தமாக ரோந்து செய்து வந்தபோது அருப்புக்கோட்டை – பந்தல்குடி ரோடு ஆட்டுச்சந்தை அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சார்பு ஆய்வாளர் நிறுத்தி விசாரித்தபோது அவர் பெயர் முத்துமாரியப்பன் என்று சொன்னவரை அவர் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்தபோது அதில் 180 ML Old Chef Brandy – 30 பாட்டில்கள் வைத்திருந்தார்.

2. மேற்படி பாட்டில்கள் பற்றி சிறப்பு சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது எந்தவொரு அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் அதிக லாப நோக்கத்துடன் மது பாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியிடம் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்தும்

அவர் விற்பனைக்காக வைத்திருந்த மதுபாட்டில்களை கைப்பற்ற சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் போலீஸ் பார்ட்டியாகிய எங்கள் இருவர் முன்னிலையில் 07.15 மணியளவில் அத்தாட்சியில் மேற்படி பாட்டில்களையும் கைப்பற்ற அதில் நானும், தலைமை காவலர் ராமமூர்த்தி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது.

3. பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரியையும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து 10.30 மணிக்கு எதிரி முத்துமாரியப்பன் என்பவருக்கு எதிராக நிலைய குற்ற எண். 16/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு நான் உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரியிடமிருந்து எந்த மதுபானங்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அதனால் தான் தனிநபர் சாட்சிகள் யாரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்யாமல் சார்பு ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த அத்தாட்சியில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 379/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **ராமமூர்த்தி (தலைமை காவலர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர் .**
**10.06.2026.**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சாத்துார் மது விலக்கு அமலாக்கபிரிவில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 10.04.2025ம் தேதி 07.15 மணியளவில் சாத்துார் மதுவிலக்கு அமலாக்கபிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு முனியாண்டி அவர்களுடன், நான் மற்றும் முதல் நிலை காவலர் லோகநாதன் ஆகியோர் பார்ட்டி சகிதம் காவல்நிலைய சரகததிற்கு உட்பட்ட பகுதிகளில் மது, சூதாட்டம் சம்மந்தமாக ரோந்து செய்து வந்தபோது அருப்புக்கோட்டை – பந்தல்குடி ரோடு ஆட்டுச்சந்தை அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சார்பு ஆய்வாளர் நிறுத்தி விசாரித்தபோது அவர் பெயர் முத்துமாரியப்பன் என்று சொன்னவரை அவர் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்தபோது அதில் 180 ML Old Chef Brandy – 30 பாட்டில்கள் வைத்திருந்தார்.

2. மேற்படி பாட்டில்கள் பற்றி சிறப்பு சார்பு ஆய்வாளர் விசாரித்தபோது எந்தவொரு அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் அதிக லாப நோக்கத்துடன் மது பாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியிடம் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்தும்

அவர் விற்பனைக்காக வைத்திருந்த மதுபாட்டில்களை கைப்பற்ற சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் போலீஸ் பார்ட்டியாகிய எங்கள் இருவர் முன்னிலையில் 07.15 மணியளவில் அத்தாட்சியில் மேற்படி பாட்டில்களையும் கைப்பற்ற அதில் நானும், முதல் நிலை காவலர் லோகநாதன் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. **(அத்தாட்சி அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரியையும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து 10.30 மணிக்கு எதிரி முத்துமாரியப்பன் என்பவருக்கு எதிராக நிலைய குற்ற எண். 16/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு நான் உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரியிடமிருந்து எந்த மதுபானங்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அதனால் தான் தனிநபர் சாட்சிகள் யாரும் அத்தாட்சியில் கையொப்பம் செய்யாமல் சார்பு ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த அத்தாட்சியில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**